
LE VIH FAIT PARTIE
DE MA VIE MAINTENANT
LES RAPPORTS
SEXUELS AUSSI
C'EST POURQUOI J'UTILISE
UN PRESERVATIF.
Let's talk
HIV
Let's talk
SAFER
SEX.
NHS

6



எச்.ஐ.வி / எய்ட்ஸ்
ஊடகக் கையேடு
இந்தியா 2007

# அறிவியலும் மொழிப் பயன்பாடும்




இந்தியாவில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய செய்திகளையும் தகவல்களை வெளியிடுவதிலும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் இங்கே தரப் பட்டுள்ளன. எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர் பான ஐரோப்பிய யூனியன் ஊடகக் முயற்சியின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட கருத்துப் பட்டறைகளில் கலந்து கொண்டு விவாதித்தவர்களின் கருத்துக்களிலிருந்து உருவாவை இவை. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் நிகழ்ச்சி தயாரிப்பாளர்களும் 112 பேர் இதில் கலந்து கொண்டனர். எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றி ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகளும் தகவல்களும் உருவாக்கப்படும் விதம் மற்றும் அவற்றின் சமுதாய பங்கு ஆகியவை பற்றி உள்ளாய்வு செய்து கொள்ளும் விதத்தில் விவாதங்கள் இதில் இடம் பெற்றன.

இந்தியா போன்ற கல்வியறிவு குறைவாக உள்ள நாட்டில் தகவல்களை மக்களிடம் சேர்ப்பதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானது. ஒரு மருத்துவரிடமிருந்தோ அல்லது சிறப்பு ஆலோசகரிடமிருந்தோ பெறுவதை விட எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய தகவல்களை ஊடகங்களிடமிருந்தே மக்கள் அதிகமாக பெறுகிறார்கள். இந்த பட்டறைகளில் கலந்து கொண்டவர்கள், தங்களின் அனுபவ அடிப்படையில், ஒழுக்க நெறி சார்ந்த ஏராளமான கருத்துக்களை தங்களின் அனுபவங்களின் அடிப்படையில் விவாதித்தனர்.

இந்த கருத்துக்கள் கீழே தொகுக்கப் பட்டுள்ளன.

### • அந்தரங்க ரகசியத்தை மதித்தல்

சமுதாயத்தால் களங்கப்படுத்தப்படுவதுடன் பாகுபடுத்தியும் பார்க்கப்படும் காரணமும் இருப்பதால், எச்.ஐ.வி/எய்ட்ஸோடு வாழ்பவர்கள் தங்களது மருத்துவ நிலையை ரகசியமாகவே வைத்திருக்கிறார்கள். அவர்களது இந்த முடிவை மதிக்க வேண்டும். உங்களுக்கு அவர்களைப் பற்றிய செய்தி மற்றுமொரு கட்டுரையாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கோ அது ஜீவ மரணப் போராட்டம். வாழ்வுடனான போராட்டம். குடைந்தெடுக்கும் கேள்விகளை கேட்க நினைக்கும் முன்பு, அவர்களை அடிக்கடி சந்தித்து நம்பிக்கையை உருவாக்குங்கள்.

### • அறிவிக்க இசைவு

எச்.ஐ.வி/எய்ட்ஸோடு வாழும் ஒருவர் உங்களை சந்திக்க சம்மதிக்கும் போது, இதனால் அவருக்கு நேரிடக்கூடியவை பற்றி அவர் அறிந்திருக்கிறாரா என உறுதி செய்யுங்கள். அவருடைய மொழியிலேயே அவரிடம் பேசுங்கள். உங்களையும் அவர் புரிந்து கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள். அவரைப் பற்றி பத்திரிகைகளில் அல்லது பிற ஊடகங்களில் எப்படி நீங்கள் எழுதப் போகிறீர்கள் அல்லது கூற போகிறீர்கள் என்பதையும் எந்த கோணத்தில் இதை நீங்கள் செய்ய விருக்கிறீர்கள் என்பதையும் கூறுங்கள்.

### • குழந்தைகளிடம் கூடுதல் கவனம்

குழந்தைகள் தங்களது நிலையை முழுவதும் அறிந்திருக்காத காரணத்தால்,

FINAL-CHAPTER-6.qxd 1/21/2007 12:49 AM Page 44





லண்டனிலுள்ள எச்.ஐ.வி/எய்ட்ஸுடன் வாழ்வோர் கூட்டமைப்பு மையத்தில் இந்திய எச்ஐவி/எய்ட்ஸ் ஊடக விருது வென்றோர்

அவர்களிடம் விளக்கமாகப் பேசி அறிவிக்க இசைவு பெறுங்கள். எதற்காக நீங்கள் அவர்களைப் பற்றி ஊடகத்தில் தெரிவிக்க இருக்கிறீர்கள், இதன் பலன் என்னவாக இருக்கக் கூடும் என்று குழந்தைகளிடமும், அவரது பெற்றோர் அல்லது காப்பாளரிடமும் தெளிவாகக் கூறுங்கள்.

## • சார்பில்லாமை

எச்.ஐ.வி/எய்ட்ஸோடு இருப்பவரை பேச விடுங்கள். அவர்களது கவலைகளை அவர்களையே கூற விடுங்கள். ஆனால் அவர்களின் பார்வையிலிருந்து அவர்களை பார்க்கவேண்டாம். அரசு, தன்னார்வ நிறுவனங்கள், எச்.ஐ.வி. உள்ளவர் கூட்டமைப்பு, அவர்களின் அண்டை அயலார், மருத்துவச் சேவை அதிகாரிகள் என எச்.ஐ.வி. தொடர்பாக செயல்படும் அனைவரிடமிருந்தும் உண்மை என்ன வென்பதை உறுதி செய்து கொண்டு அதை செய்தியாக்குங்கள். ஆனால் எந்த ஒரு பிரிவினருக்கும் கூடுதல் முக்கியத்துவம் தந்து விட வேண்டாம். இவர்கள் அனைவரும் சமமாக பாவிக்கப்பட வேண்டும். அரசின் கொள்கை என்ன, இதன் தாக்கம் என்ன, அது எப்படி பாதிக்கிறது போன்றவை பற்றி கூறுவதிலும் கவனம் தேவை.

## • சரியான மொழி நடையை பயன்படுத்துதல்

அரசியல் ரீதியாக சரியானதும் கூறுணர்ச்சியை நுட்பமாக பதிவு செய்யக் கூடியதுமான மொழியை பயன்படுத்துங்கள். துறைசார்ந்த வார்த்தைகளைத் தவிர்க்கவும். முதல் எழுத்துக்களை கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் சொற்களை (உதாரணம் Acquired Immune Deficiency Syndrome அதாவது AIDS என) முதலில் விளக்குங்கள். எளிய, தெளிவான நுட்பமான மொழியை பயன்படுத்துங்கள். இதனால் உங்களது படைப்பு பலரைச் சென்றடையும். சரியான தகவல்களை கொண்டு சேர்ப்பது மட்டுமே உங்கள் நோக்கம் என்பதால், உங்கள் படைப்பு, உணர்ச்சியைத் தூண்டாதவாறு எழுதுங்கள். திரும்பதிரும்ப ஒரே மாதிரியாகக் கூறப்படும் மற்றும் துறை சார்ந்த வார்த்தைகளை தவிர்த்திடுங்கள். இதை உங்களது காப்பி எடிட்டரிடம் காட்டி உறுதி செய்து கொள்ளுங்கள். நீங்கள் பயன்படுத்தும் மொழியானது சமூக இனம் சார்ந்த பேச்சு மொழியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அறிவியல் பற்றி கூறும் போது முடிந்த அளவு எளிமைப்படுத்தி விளக்குங்கள்.



சிம்லாவிலுள்ள ஏ.ஆர்.டி. மையத்தை பார்வையிடுதல்

## • அடிப்படை உண்மைகளையும் புள்ளி விபரங்களையும் உறுதி செய்து கொள்வது

உங்களது படைப்பானது அடிப்படை உண்மைகளையும் புள்ளி விபரங்களையும் பற்றியதாக இருந்தால், நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கிடைத்த தகவல்களை 2 அல்லது 3 ஆதாரங்களைக் கொண்டு உறுதி செய்து கொண்டு உபயோகிக்கவும். எப்போதும் சரியான கோணத்தில் புள்ளி விபரங்களை விளக்க வேண்டும். புள்ளி விபரங்களை நம்பக்கூடிய ஆதாரங்களிலிருந்து பயன்படுத்துவதோடு, அவற்றை குறிப்பிடுவதும் அவசியம்.

தற்செயலாக நிகழும் தவறுகளைத் தவிர்க்க, உங்களது படைப்பை நன்றாக ஆராய்ந்து பார்த்துவிடவும். அரசுக்கும் நேகோவுக்கும் எதிரானதாக உண்மை அமைந்து விட்டாலும் கூட, கட்டாயம் அதை வெளிக் கொணருங்கள்.





உங்கள் பணி முரண்பாட்டிலுள்ள உட்பொருளை சுட்டிக்காட்டுதலே. அதே நேரம் எதிரெதிரான மோதல்களை தவிர்த்து விட வேண்டும்.

## ஆதாரங்களை சரியீடு பார்த்தல்

நீங்கள் தகவல்கள் பெறும் ஆதாரங் களை பரிசீலித்துக் கொள்ளுங்கள். பாசாங்கற்ற ஆதாரத்திலும் கூட மறை முகமான நோக்கங்கள் இருக்கலாம். தன் னார்வ அமைப்புகளின் செயல்பாட்டை நன்றாக கவனியுங்கள்.

## தொடர்ந்து படியுங்கள்

எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பாக நிறைய படியுங்கள். உங்களது அறிவு பரந்துபட்ட, நடப்புத் தகவல்களை பெற்றதாகவும் எப்போதும் அமைந்து விடும். பின்னணி தெரிந்து உருவாக்கப் படும் படைப்பை உங்களால் பொருத்த மான சூழ்நிலைகளில் தர முடியும்.

## படைத்ததை தொடர்ந்து கவனித்தல்

அனைத்து நிகழ்ச்சிகளிலும் உங்களது படைப்பை, பொழுதுபோக்குப் பகுதி உட்பட, இடம் பெறச் செய்யுங்கள். அதிக பார்வையாளர்களை கொண்டுள்ள நிகழ்ச்சிகளில் இவற்றை அறிமுகம் செய்யுங்கள். பொழுது போக்கு அம்சங்கள் உள்ளதாக எச்.ஐ.வி/ எய்ட்ஸ் பற்றிய உங்களது படைப்பை மாற்றுங்கள். உலக எய்ட்ஸ் தினத்தின் போது மட்டு மின்றி, ஆண்டு முழுவதும் இடம் பெறும் வகையில் அதை படைக்க முயலுங்கள். படைப்பை உருவாக்கிய பின் உங்கள் பணி முடிந்து விட்டதாக கருதி அதை மறந்து விடாதீர்கள். நீங்கள் தெரிவித்திருந்தவை தொடர்பாக தற்போதைய நிலை பற்றி தொடர்ந்து தெரிவிக்க முயலுங்கள். உங்களது படைப்பு, அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகளின் செயல் பாடுகளை மதிப்பிடுவதாக இருந்தால் இதை நீங்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

## உங்கள் படைப்பு தொடர்பான கூடுதல் சேவை

நேரத்தையோ அல்லது பதிப்பிக்கப் படக்கூடிய இட அளவைப் பற்றியோ கவலை கொள்ளாமல், முழு அளவிலான பேட்டியை எடுங்கள். உங்களது ஊடகம் அந்த படைப்புக்கான முழு நேரத்தையோ இடத்தையோ தர முடியாவிட்டாலும் கூட, முழு பேட்டியையும் உங்கள் இணைய தளத்தில் வெளியிடுங்கள். இதனால் முழு பேட்டியில் இடம் பெற் றிருக்கும் தகவல்கள், நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டிருப் போரை சென்றடைய முடியும்.

## கருத்து செறிவான படங்களை வெளியிடுவது

ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம் ஒரு படம். ஆனாலும் படங்கள் சில சமயம் குறைகளைக் கொண்டிருக்கின்றன என்பதையும் மறந்துவிடக் கூடாது. குறிப்பிட்ட விதமாக சலிப்பூட்டும் வகையில் ஒரு குழுவையோ அல்லது ஒரு சமூகப் பிரிவையோ மீண்டும் மீண்டும் படம்எடுத்து வெளியிடுவதை தவிர்த்திடுங்கள்.

## மொழிப் பயன்பாட்டில் கையாள வேண்டிய நுணுக்கங்கள்

எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய செய்தி களை வெளியிடும் போது அதில் நாம் கொண்டிருக்கும் சுய விருப்பு வெறுப்புக் களின் தாக்கம் வெளிப்படாமலும்




*2005ம் ஆண்டுக்கான எச்.ஐ.வி எய்ட்ஸ் ஊடக விருதுவென்றோர்*

இதைப் பற்றிய குறைந்த அறிவு கொண்டிருப்பது எழுத்தில் வெளிப் படாமலும் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே எச்.ஐ.வி/எய்ட்ஸ் மீது சமூகத் தால் சுமத்தப்படும் களங்கம், தப்பெண் ணங்கள், தவறான கருதுகோள்கள் மற்றும் பயங்களை நமது மொழிநடை, வளரச் செய்வதற்கு உதவாத வண்ணம் இருக்கவேண்டும்.

எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றி எழுதும் போது நாம் கடைப்பிடிக்கும் மொழி நடையானது இது பற்றிய பொதுவான பார்வையை ஆரோக்கியமாக மாற்றி யமைக்க உதவுவதாக இருக்க வேண்டும். செய்தியாளர்கள் என்ற முறையில், இந்தத் தொற்றை புரிந்து கொள்வதுடன் தடுப்பதற்கு உதவக்கூடிய மொழி நடையை பயன்படுத்தக் கற்றுக் கொள்ளவும் வேண்டும்.

ஒரு புறம் உணர்வு ரீதியிலான சிக்கல்கள் மற்றும் சமூக ரீதியிலான





விளைவுகளை எச்.ஐ.வி/எய்ட்ஸ் கொண்டிருக்கிறது. மறுபுறம் துறைசார்ந்த எளிதில் புரியாத அம்சங்களை கொண்டிருக்கிறது. இவற்றை திரும்ப திரும்ப முயற்சி செய்து புரிந்து கொள்ள வேண்டும். அதேநேரம் இதைப் பற்றி நாம் வெளிப்படுத்தும் கருத்தானது அரைகுறையாக புரிந்து கொண்டு எழுதப்பட்டதாக இருக்கக் கூடாது. முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் துறை சார்ந்த நுட்பமான தகவல்களை புரிந்து கொள்ள முயற்சி செய்வதுடன் தவறான தகவல்கள் ஒரு போதும் வெளியாகாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான செய்தி உருவாக்குதலில் சரியான மொழியின் அம்சங்கள் இவை தான்

- சரியான மொழி நடை ஆக்க பூர்வமானது
- மனவெழுச்சியை ஊட்டக் கூடிய நடையை தவிர்ப்பது
- குறிப்பிட்ட விதத்தில் சலிப்பூட்டும் விதத்தில் படைக்கப்படுவதாக மொழி நடை இருக்கக் கூடாது
- தவறான எண்ணங்களை உருவாக்குவதாகவோ களங்கத்தைத் தூண்டுவதாகவோ இருக்கக் கூடாது
- யாரைச் சென்றடைய வேண்டுமோ அவரை சென்றடையும் விதத்தில் மொழி நடை இருக்க வேண்டும். இதற்கு நுட்பமான அடிப்படைகளை புரிந்து கொண்டிருப்பதும் யாருக்காக படைக்கப்படுகிறது என்பதை அறிந்து வைத்திருப்பதும் அவசியம்.
- முடிவுகளை வலிந்து உருவாக்குவதாகவும் வேற்றுமை உணர்வை ஏற்படுத்துவதாகவும் மொழி நடை இருக்கக் கூடாது
- பாதிக்கப்பட்டவருக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அவர்களுக்கு ஊக்கம் தருவதாகவும் இருக்க வேண்டும். அவர்களை பழிப்பதாக இருக்கக் கூடாது.
- மொழி நடை நடுநிலையானதாக இருக்க வேண்டும். பாலின பேத உணர்வுகளை எச்சரிக்கையுடன் கையாளுவதாக இருக்க வேண்டும்.
- துறை சார்ந்த அடிப்படைகளை சரியாகவும் எளிதில் அனைவருக்கும் புரியும்படி சொல்வதாகவும் இருக்க வேண்டும்.

## நுட்பமாக எழுதுதல்

| தவிர்க்க வேண்டிய சொல் X | தவிர்க்கப்படவேண்டிய காரணம் ? | பயன்படுத்த வேண்டிய சொல் ✔ |
|---|---|---|
| Aids | Aids என்னும் ஆங்கில சொல் பல பொருளை குறிக்கிறது. ஆனால் எய்ட்ஸ் என்ற சொல் **Acquired Immune Deficiency Syndrome** என்பதை குறிப்பதால் இதையே பயன்படுத்த வேண்டும். | AIDS |
| எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் அல்லது எய்ட்ஸ் | எச்.ஐ.வி. என்ற வார்த்தையும் எய்ட்ஸ் என்ற வார்த்தையும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. எச்.ஐ.வியின் முடிவு எய்ட்ஸ். | எச்.ஐ.வி/எய்ட்ஸ் என்பதே சரி |
| எய்ட்ஸ் வைரஸ் எச்.ஐ.வி. வைரஸ் | இது எச்.ஐ.விக்கும் எய்ட்ஸுக்கும் இடையே குழப்பத்தை ஏற்படுத்தும். எச்.ஐ.வியிலுள்ள வி என்ற எழுத்து வைரஸை குறிப்பதால் எச்.ஐ.வி. வைரஸ் என குறிப்பிடக்கூடாது. | எச்.ஐ.வி. |
| எய்ட்ஸ் பேரழிவு கொள்ளை நோய் | இது பீதியை உருவாக்குவது. எச்.ஐ.வி/எய்ட்ஸை கட்டுப்படுத்தவே முடியாது என்ற பயத்தை உருவாக்கும். நம்பிக்கையின்மையும் பாகுபடுத்திப்பார்ப்பதும் ஏற்படும். | எச்.ஐ.வி. தொற்று |
| எய்ட்ஸ் நோய் | எய்ட்ஸ் ஒரு நோயல்ல. குறைபாடுகளின் தொகுப்பே. எச்.ஐ.வியால் ஏற்படும் எதிர்ப்பணு குறைவால் சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்படுகின்றன. | எய்ட்ஸ் நிலையில் ஏற்படும் நோய்கள் அல்லது காசநோய் புற்றுநோய் என தெளிவாக குறிப்பிட வேண்டும் |
| முழுமையாகப் பரவியிருக்கும் எய்ட்ஸ் | எச்.ஐ.விக்கும் எய்ட்ஸுக்குமான வேறுபாடு சரியாக உணரப்பட்டால் இந்தப் பயன்பாடு அவசியமில்லை. பாதிப்பரவியிருக்கும் எய்ட்ஸ் என்று எதுவுமில்லை | எய்ட்ஸ் |
| எய்ட்ஸ் பரிசோதனை | எச்.ஐ.வியை அறியத்தான் பரிசோதனைகள் உள்ளன. எய்ட்ஸ் இருப்பதை அறிய சோதனைகள் இல்லை. | எச்.ஐ.வி. (எதிர்ப்பணு) அறியும் சோதனை |

FINAL-CHAPTER-6.qxd 1/21/2007 12:51 AM Page 47





# நுட்பமாக எழுதுதல்

| தவிர்க்க வேண்டிய சொல் ✗ | தவிர்க்கப்படவேண்டிய காரணம் ? | பயன்படுத்த வேண்டிய சொல் ✓ |
|---|---|---|
| எச்.ஐ.வியைப் பற்றுவது | யாரும் எச்.ஐ.வியைப் பற்றிக் கொள்ள முடியாது. எச்.ஐ.வியால் தொற்றிக்கொள்ளப்பட முடியும். எச்.ஐ.வியை பரிமாற்றம் பெறுவது என்பதும் சரிதான். யாரை என்பதும் எப்படிப் பற்றிக் கொள்கிறது என்பதும் வலியுறுத்தப்பட வேண்டியது. இதை எச்.ஐ.வி. பெற்றவர் அறிந்திருப்பதில்லை. | எச்.ஐ.வியைப் பெறுவது என குறிக்கலாம். எச்.ஐ.வி+ (எச்.ஐ.வி உள்ளவர்) என்றும் கூறலாம் |
| எய்ட்ஸைப் பற்றுவது | எய்ட்ஸை யாரும் பிடிக்க முடியாது. | எய்ட்ஸ் குறைபாடு அதிகரித்தல் எய்ட்ஸோடு வாழ்பவர் |
| எய்ட்ஸை சுமப்பவர் எய்ட்ஸ்+ எய்ட்ஸ் கேரியர் | இது எச்.ஐ.வியால் தொற்றப்பட்டிருப்பது, எய்ட்ஸைப் பெற்றிருப்பது என்ற இரண்டு முக்கிய நிலைகளையும் குழப்பிக் கொள்வது. ஒருவர் எய்ட்ஸ் குறைபாடு உள்ளவராக இருக்கலாம். ஆனால் நோயாளியாக இருக்கத் தேவையில்லை. | எச்.ஐ.வி உள்ளவர் எய்ட்ஸோடு வாழ்பவர் |
| முற்றிலும் பாதுகாப்பான செக்ஸ் | ஆணுறையை உபயோகித்தாலும் முழுமையான பாதுகாப்பான செக்ஸை ஒருவர் வைத்து கொள்வதில்லை. அதனால் வைரஸ் தொற்றும் வாய்ப்பு மட்டுமே குறைகிறது. | பாதுகாப்பான செக்ஸ் |
| உடல் சுரப்புத் திரவங்கள் | உடலில் சுரக்கும் திரவங்கள் எல்லாமே எச்.ஐ.வியைக் கடத்துவதில்லை. | விந்து, தாய்ப்பால் ரத்தம், பெண் பிறப்புறுப்பு சுரப்பு |
| எச்.ஐ.வி. பலியானவர் பாதித்திருப்பவர் | பலியானவர் என்ற சொல் முற்றிலும் வலுவிழந்து விட்ட நிலையைக் குறிக்கும். எச்.ஐ.வி/எய்ட்ஸைப் பெற்றிருப்பவர் பலியானவராகக் கருதப்பட முடியாது. | எச்.ஐ.வி/ எய்ட்ஸோடு வாழ்பவர். எச்.ஐ.வி+ |
| எய்ட்ஸ் பாதித்திருப்பவர் | எச்.ஐ.வி/எய்ட்ஸோடு வாழ்பவர் பலரும் பல ஆண்டுகளுக்கு நல்ல உடல் நலத்தோடு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். | எச்.ஐ.வி உள்ளவர் |
| எய்ட்ஸ் நோயாளி | மருத்துவமனைகளில் நோய் சிகிச்சை பெறுபவர் மட்டுமே நோயாளி. எச்.ஐ.வி. தொற்றிலிருப்பர் மற்றும் மருத்துவ பராமரிப்பில் இருப்பவர் இவர்களை நோயாளி என்று குறிப்பிட முடியாது. | எச்.ஐ.வி/ எய்ட்ஸோடு வாழ்பவர் எய்ட்ஸோடு வாழும் நபர் |
| மாசற்றவர் (அப்பாவி) | இப்படிக் குறிப்பிட்டால், மற்றொருவரே ஆபத்தை உருவாக்கியவர் என்பதைக் குறிக்கிறது. | இந்த வார்த்தையை முற்றிலும் தவிர்க்கவும். |
| விபச்சாரி | இந்த வார்த்தை பழிச்சொல்லாகவும் இழிவுபடுத்துவதாகவும் அமைகிறது. | செக்ஸ் தொழிலாளி அல்லது பாலியல் தொழிலாளி |
| வேசி | இந்த வார்த்தை பழிச்சொல்லாகவும் இழிவுபடுத்துவதாகவும் அமைகிறது. | பலருடன் பாலியல் உறவு கொள்பவர். |
| போதை மருந்துக்கு அடிமை | போதைப் பழக்கத்தில் ஈடுபட்டிருப்பவர் இந்தப் பழக்கம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவே நம்புகின்றனர். போதைக்கு அடிமை என்ற சொல் சமூகம் இவர்களைப் புறக்கணிப்பதற்கு ஏதுவாகும். இதனால் பயனேதுமில்லை. இதனால் பயனேதும் இல்லை. தொற்றக்கூடிய நுண்ணுயிரிகளைக் கொண்ட ஊசிகளை பயன்படுத்துவதே எச்.ஐ.வி. பரவுவதற்குக் காரணம், போதை மருந்து அல்ல. | போதை ஊசிப் பழக்கம் உள்ளவர் |
| ஹோமோசெக்ஸ் | மேற்கத்திய வழக்கான இந்தச் சொல் ஒரு சமூக அடையாளமாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் உலகின் பல பகுதிகளில் ஓரின விழைவு உடையவர் இந்த அடையாளத்துடன் இருப்பதை விரும்பவில்லை. | ஆண் ஓரினச் சேர்க்கையாளர் |
| பேரபாயம் | பேரபாயம் கொண்ட குழுவினர் என்று குறிப்பிடுவதை விட அபாயத்தை தனக்குத் தானே ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கை கொண்டவர் என்றே குறிப்பிட வேண்டும். ஒருவர் எந்தக் குழுவில் இருக்கிறார் என்பதல்ல, எதை செய்து எச்.ஐ.வியைப் பெற்றிருக்கிறார் என்பதே முக்கியம். | அதிக ஆபத்து தரும் நடத்தை கொண்டவர் |

